**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>**

**<u>O.S.No. 106 /2023</u>**

24.10.2025 வா.சா.1 திரு. சிவசுப்பிரமணியன்

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாசாஆ 1 ஐ கிரையம் எழுதிக் கொடுத்த நபர்களுக்கு சொத்தானது பூர்விக பாத்தியப்பட்டது என மேற்படி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது அதற்கான மூல ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் வருவாய் துறை ஆவணங்களை பார்த்துள்ளேன். தாவா சொத்தானது வருவாய் துறை ஆவணங்களின் படி சர்க்கார் புறம்போக்கு என்றால் சரிதான். தாவா சொத்தின் தற்போதைய சர்வே எண். 1346/5, 1346/7 என்றால் சரிதான். சர்வே எண். 1346/5 ல் வருவாய் ஆய்வாளர் குடியிருப்பு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 1346/7 ல் ஒரு பகுதியில் கிராம நிர்வாக அலுவலக கட்டிடம் உள்ளது என்றால் சரிதான்.
2. நான் பிராதில் குறிப்பிட்டுள்ள சர்வே எண். 1346/5, 1346/7 எந்த இடத்தில் உள்ளது என்றால் மேற்படி சர்வே எண்களில் தெற்குபகுதியில் உள்ளது. வாசாஆ. 5 ல் தான் முதல் முதலாக சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் கட்டிடம் கட்டியுள்ளேனா என்றால் இல்லை. காம்பவுண்ட் கட்டியுள்ளேனா என்றால் இல்லை தகர சீட் போட்டு காம்பவுண்ட் போட்டு மறைத்து வைத்துள்ளேன். நான் காம்பவுண்ட் கட்ட முயற்சி செய்வதை பிரதிவாதிகள் தடுத்ததாக பிராதில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.
3. எனது முன் ஆவணங்களுக்கும் வாசாஆ 5 க்கும் முரண்பாடுகள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பிராதில் சொத்து விவரங்கள் சரியாக விவரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 24.10.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.10.24 16:56:45 +0530

Principal District Munsif,
Tirunelveli.